100 நாள் வேலை ஊதியம் வழங்காததை கண்டித்து

ஒன்றிய நிதியமைச்சருக்கு கருப்புக்கொடி காட்டுவேன்

மாணிக்கம் தாகூர் எம்பி பேட்டி

விருதுநகர், நவ. 9: நூறு நாள் வேலை திட்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து, விருதுநகரில் இந்தியன் வங்கி முன்பு காங்கிரஸ் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மாணிக்கம் தாகூர் எம்பி அளித்த பேட்டி:

நூறுநாள் வேலைத்திட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் துவங்கி நடப்பு மாதம் வரை ஊதியம் வழங்கப்படவில்லை. உழைத்த பணத்தை தீபாவளி பண்டிகைக்கு முன்பாக வழங்க வேண்டும். விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.89 கோடி வரவேண்டும். ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அடுத்த வாரம் விருதுநகர் வருவதற்கு முன்பாக பணத்தை வழங்கவேண்டும். இல்லையென்றால், அவருக்கு எதிராகநானே கருப்புக்கொடி காட்டுவேன். இந்தியா கூட்டணிக்கு மக்கள் நீதி மய்யம் கமல் வரவேண்டும். ராகுல் காந்தி யாத்திரையில் கலந்து கொண்ட கமல் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும். ராகுல்காந்தி பிரதமரானால் ஜிஎஸ்டி வரிமுறை மாற்றப்படும். தமிழகத்திற்கு நியாயம் கிடைக்கும் என்றார்.

வசந்த் & கோவின்

தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை

சென்னை, நவ.9: அதிரடி விலை குறைப்பு, மிகக்குறைந்த விலைக்கு உத்தரவாதம், ஏராளமான பரிசுகள் போன்ற மிகச்சிறந்த விற்பனை திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்கள் மனத்தில் நீங்காத இடம்பிடித்தது இந்தியாவின் நெ.1 டீலர் வசந்த் & கோ. தமிழகம், பாண்டிச்சேரி, பெங்களூரு உள்பட மொத்தம் 114 கிளைகளுடன் செயல்படுகிறது. இது, விரைவில் 115வது கிளையை திறக்கஉள்ளது.

தீபாவளியை முன்னிட்டு, வசந்த் அன்கோ சிறப்பு தள்ளுபடி விற்பனையை துவக்கியுள்ளது. சிறப்பு விற்பனையில் அனைத்து முன்னணி வீட்டு உபயோகப் பொருட்களும் மிக குறைந்த விலையில் எளிய தவணை முறை வசதியுடன் கிடைக்கிறது. இது போல, உலகக்கோப்பை கிரிக்கெட் திருவிழாவை மிகப்பெரிய திரையில் உங்கள் வீட்டிலேயே கண்டுகளிக்கசாம்சங், சோனி, எல்.ஜி, பானாசோனிக், ஹயர், லாயட் போன்ற முன்னணி பிராண்ட் டிவி தயாரிப்பாளர்களின் மாடல்களும் மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

பல்வேறு வகையான மொபைல் போன்கள், ஏசி, ரெப்ரிஜிரேட்டர், வாஷிங் மெஷின் மைக்ரோவேவ் ஓவன், மிக்சி, கிரைண்டர், காஸ் ஸ்டவ், வாட்டர் பியூரிபையர் ஆகிய அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களை சுலபமாக தவணை முறையில் வாங்கிச் செல்லலாம்.

வாடிக்கையாளர்களுக்கு பயன் தரும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு ஆபர்களும் பைனான்ஸ் வசதியுடன் எளிய தவணை முறை வசதிகளும் உள்ளன. இந்த அரிய வாய்ப்பை வாடிக்கையாளர்கள் தவறிவிடாமல் பயன்படுத்திக் கொண்டு விழாக் கால விற்பனையில் மகிழ்ச்சியுடன் வசந்த் அன்கோவுடன் கொண்டாடலாம்.

ஒரு சவரன் வீதம் 100 வாடிக்கையாளர்களுக்கு ₹5000க்கும் மேல் பொருட்கள் வாங்கினால் பம்பர் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிதோறும்

ஆன்மிக மலர்

படியுங்கள்

அதிமுக கரைபோட்ட வேட்டியை துறந்த ஓபிஎஸ்

▶ அதிமுக பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இதுவரை எங்கு சென்றாலும் அதிமுக கரை வேட்டியுடன் வலம் வந்த ஓபிஎஸ், சிங்கப்பூருக்கு சிகிச்சைக்காக சென்றுள்ள அவர் விமான நிலையத்தில் அதிமுக கரைபோட்ட வேட்டியை தவிர்த்து சாதாரண வேட்டி அணிந்து வந்தார். அருகில் அவரது மகன் ஜெயபிரதீப்.

வீட்டில் குழந்தை பிரசவித்த இளம்பெண் பலி

திருப்பத்தூர், நவ. 9: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த சாவடியூரை சேர்ந்தவர் ரமேஷ்(28), பெயிண்டர். இவரது மனைவி ஹேமலதா(23). இவர்களுக்கு மெய்யழகன் (2) என்ற ஆண் குழந்தை உள்ளது. இந்நிலையில் மீண்டும் ஹேமலதா கர்ப்பமானார். நிறைமாத கர்ப்பிணியாக இருந்த இவர், நேற்று முன்தினம் காலை பிரசவவலி ஏற்பட்டதால் மருத்துவர்கள் அட்மிட் ஆக சொல்லி உள்ளனர். ஆனால் அவர் அட்மிட் ஆகாமல் வீட்டிற்கு சென்று விட்டார். வீட்டிற்கு சென்ற சில மணி நேரத்தில் ஹேமலதாவிற்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. பிரவத்திற்கு பின் ரத்தப்போக்கு அதிகமாகி சுயநினைவை இழந்து, நேற்று அதிகாலை ஹேமலதா பரிதாபமாக இறந்தார். குழந்தை நலமாக உள்ளது.

தலைமை ஆசிரியர் திட்டியதால் தூக்கில் தொங்கிய ஆசிரியர்

பென்னாகரம், நவ.9: தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். தலைமை ஆசிரியராக லோகநாதன் பணியாற்றி வருகிறார். வேளாண் ஆசிரியராக பாலக்கோட்டைச் சேர்ந்த கிருஷ்ணன்(53) உள்ளார். இவர் பிளஸ்1, பிளஸ்2 மாணவர்களுக்கு வேளாண் பாடம் எடுத்து வருகிறார்.

நேற்று காலை இறை வழிபாட்டு கூட்டத்தில், மாணவர்கள் மற்றும் சக ஆசிரியர்கள் முன்பு, நேற்று முன்தினம் மாணவர்களுக்கு தேர்வு நடத்தியது பற்றி, வேளாண் ஆசிரியர் கிருஷ்ணனை தலைமை ஆசிரியர் கண்டித்ததாக கூறப்படுகிறது.

இதனால் மனஉளைச்சல் அடைந்த கிருஷ்ணன், திடீரென பள்ளி வளாகத்தில் இருந்த மரத்தில் தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றார். சக ஆசிரியர்கள் ஓடிச்சென்று, அவரை மீட்டு பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதித்தனர். போலீஸ் விசாரணையில், சில தினங்களுக்கு முன், வேளாண் ஆசிரியர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க தலைமை ஆசிரியர் பரிந்துரை செய்துள்ளதால் தற்கொலைக்கு முயன்றது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

தீபாவளி போனஸ் இழுத்தடிப்பு

கொடநாடு எஸ்டேட்டில் தொழிலாளர்கள் போராட்டம்

கோத்தகிரி, நவ.9: நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே ஜெயலலிதா மற்றும் சசிகலா பங்குதாரராக உள்ள கொடநாடு எஸ்டேட்டில் 200-க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் தற்காலிக தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு கடந்த 2 ஆண்டுகளாக தீபாவளி பண்டிகை போனஸ் வழங்கவில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை நெருங்கிய நிலையில் இதுவரை போனஸ் வழங்காததால் கொடநாடு எஸ்டேட் நிர்வாகத்தை கண்டித்து தொழிலாளர்கள், எஸ்டேட் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இதில் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர். காலை முதல் மதியம் வரை போராட்டம் நீடித்தது. இந்நிலையில், எஸ்டேட் மேலாளர் வெளியூரில் உள்ளதால் இன்று (9ம் தேதி) பேச்சுவார்த்தை நடத்தப்படலாம் என கூறப்படுகிறது.

ஒன்றிய அரசுக்கு டிடிவி தினகரன் கேள்வி

முல்லை பெரியாறு அணையில் நடக்கும் சோதனை என்ன?

சென்னை, நவ. 9 : முல்லைப் பெரியாறு அணையில் திடீரென ஒன்றிய அரசு செய்து வரும் ஆய்வுக்கான காரணத்தை தமிழ்நாடு விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள டிவிட்டர் பதிவு:

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முல்லைப் பெரியாறு அணையில் ஒன்றிய சுரங்கத்துறையின் கீழ் இயங்கும் தேசிய பாறை மற்றும் இயந்திரவியல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் முகாமிட்டு ஆய்வு மேற்கொள்வது அதிர்ச்சியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

முல்லைப் பெரியாறு அணையில் திடீரென நடைபெற்ற ஆய்வுக்கான காரணத்தை விவசாயிகளுக்கு விளக்குவதோடு, ஐந்து மாவட்ட விவசாயிகளின் ஜீவாதாரமாக விளங்கும் முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் மாநில உரிமையைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்.

பேஸ்புக் காதலியுடன் தகராறு போலீஸ்காரர் தற்கொலை

சேலம், நவ.9: சேலம் அருகே பேஸ்புக் காதலியுடன் ஏற்பட்ட தகராறில் போலீஸ்காரர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே சுண்டமேட்டூர் பகுதியை சேர்ந்தவர் நவீன்குமார்(25). இவர் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பட்டாலியனில் போலீஸ்காரராக பணியாற்றி வந்தார். இரண்டு நாட்கள் விடுமுறையில் வீட்டுக்கு வந்தார். நேற்று முன்தினம் இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டில் இருந்த அவர் திடீரென தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதுபற்றி தகவல் அறிந்த மகுடஞ்சாவடி போலீசார் அவரது உடலை மீட்டு இடைப்பாடி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுபற்றி போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தினர். அதில், நவீன்குமார் கோவை பகுதியை சேர்ந்த பெண்ணை பேஸ்புக் மூலம் காதலித்து வந்துள்ளார்.

இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. காதலியுடன் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த நவீன்குமார் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்துள்ளது. அவர் காதலித்த பெண் யார்? என்று குடும்பத்தினருக்கு கூட தெரியவில்லை.

நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடு

சென்னையில் இன்று ஆலோசனை கூட்டம்

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, நவ. 9: நாடு முழுவதும் 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் குறித்து சென்னையில் இன்று ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு கூறியுள்ளார்.

2024ம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான ஆயத்த பணிகளில் இந்திய தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் பணிகள், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் பணிகளில் அந்தந்த மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழகத்திலும் 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. 18 வயது நிறைவடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வருகிற 18ம் தேதி (சனி), 19ம் தேதி (ஞாயிறு) நடைபெறுகிறது.

இந்த நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், கேரளா மற்றும் புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல்துறை உயர் அதிகாரிகளின் மண்டல மாநாடு சென்னையில் இந்திய ஆணையத்தால் மறுஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில், 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான வாக்கெடுப்பு மற்றும் அதற்கான ஆயத்த பணிகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்த கூட்டத்தில், இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்பார்கள். இந்த மாநாடு இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை ஐஎஸ்டி சாலையில் உள்ள ஹோட்டல் ராடிசன் புளூவில் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

700 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்

சென்னை, நவ.9: சென்னை கொருக்குப்பேட்டை ரயில் நிலைய பிளாட்பாரத்தில் நேற்று முன்தினம் இரவு மூட்டை மூட்டையாக ரேஷன் அரிசி உள்ளதாக ரயில்வே போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்றனர். அவர்களை பார்த்ததும் அரிசி கடத்தல் காரர்கள் தப்பி ஓடிவிட்டனர். இதில் சுமார் 700 கிலோ ரேஷன் அரிசியை கைப்பற்றிய ரயில்வே போலீசார், அதனை அம்பத்தூரில் உள்ள தமிழ்நாடு உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு மற்றும் பதுக்கல் பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ. / நாமக்கல்	ST-01(A)	1
2	மே.பொ / சி / கூ.உ.(மு) ஒ	13, 14	2
3	CE / IT & RAPDRP	39, 40, 41	3
4	மே.பொ / கொ & ந/ தூ.அ.மி.நி	3327-S (கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது)	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/5921/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
சென்னை - 32.

தமிழ்நாட்டில் கழிவு மேலாண்மை விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்திற்கு தற்காலிக அடிப்படையில் சுற்றுச்சூழல் ஆலோசகர்களுக்கான (கழிவு மேலாண்மை) மூன்றாம் நபர் முகமையை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறைப்படி) வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: தொ.3/ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்/ கோ.014509/ சுற்றுச்சூழல் ஆலோசகர் / 2023 நாள்: 07.11.2023

தமிழ்நாட்டில் கழிவு மேலாண்மை விதிகளை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவுதல் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குதல்.

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை 09.11.2023 அன்று அல்லது அதற்குப் பிறகு www.tenders.tn.gov.in & www.tnpcb.gov.in ஆகிய இணையதளங்களில் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசி தேதி 08.12.2023 ஆகும்.

உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை- 32

செ.ம.தொ.கீ / 5969 / ஒப்பந்தப்புள்ளி / 2023

தெற்கு ரயில்வே
திருவனந்தபுரம் (கதி சக்தி யூனிட்)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.TVC/GSU/18/2023 தேதி.31/10/2023

தலைமை செயல்திட்ட மேலாளர் / கதி சக்தி / திருவனந்தபுரம் கோட்டம், திருவனந்தபுரம் – 14 அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் எமது மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் www.ireps.gov.in-ல் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்காக ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். திருவனந்தபுரம் கதி சக்தி யூனிட்–ன் பணிகளுக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள் / ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் www.ireps.gov.in-ல் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

பணி பற்றிய விவரம் : 6 மீ அகலம் கொண்ட நடைமேம்பாலத்தை 5 ரயில் நிலையங்களில் அமைத்தல் – அதாவது GUV, AFK, ALLP, TRVL, KYJ–ல் & 12 மீ அகலம் கொண்ட ஒரு நடைமேம்பாலத்தை NCJ-ல் அமைத்தல்	
தோராய மதிப்பு ரூ (இலட்சத்தில்)	3124.639
பிணை வைப்பு தொகை ரூ.	17,12,300.00
பணியை முடிப்பதற்கான காலம் மாதங்களில்	12 மாதங்கள்
திறக்கப்படும் தேதி	22/11/2023

டெண்டர் முடிவு நேரம்: 11.00 மணி.
ஒப்பந்தப்புள்ளியின் தோராய மதிப்பு, பிணை வைப்பு தொகை & அமைவிடம் ஆகிய விவரங்கள் மின்னணு வலைதளம் www.ireps.gov.in-ல் கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்பப்புள்ளி சமர்ப்பித்தல் பற்றிய விவரங்களுக்கு பார்வையிடுங்கள் இணையதளம் www.ireps.gov.in

Follow us on : twitter.com/GMSRailways

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION
HEAD OFFICE : 12, THAMBUSAMY ROAD, KILPAUK, CHENNAI - 600010
Ph. No. (044) 26426773 Email id : tncsc.tn@nic.in CIN : U15137TN1972SGC006157
BS6/042085/2023 **SHORT - E-TENDER NOTICE** Dated : 08.11.2023

Short E-Tender No : BS6/042085/2023-TNCSC/23-24

Tamil Nadu Civil Supplies Corporation invites Online electronic tender for **Purchase of "60,000 Metric Tonnes of Tur dal (Split-Husked & Fatka) (Indigenous) / Tur Dal (Split Husked -Imported) / Lentil locally known as Canadian Yellow Lentil (Split - Husked & Laired No.2) / Lentil locally known as Canadian Yellow Lentil (Whole - Husked & Laired No.2) as per AGMARK specifications."**

Complete short e-tender document can be viewed and downloaded from **https://tntenders.gov.in/nicgep/app**

The bidders have to participate online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III

Last Date and Time for Online Submission : **Upto 11.30 A.M. on 22.11.2023**

DIPR/ 5965 /TENDER/2023 **MANAGING DIRECTOR**

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.11/2023-2024/முவதொஅ/நாள்-07.11.2023

தமிழ்நாடு அளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி அவர்களால் **திருச்சி** (நெ) நபார்டு மற்றும் **கிராமச்சாலைகள் கோட்டத்தை** சார்ந்த நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XXIX/ 2023-24 (75 பாலங்கள்) கடனுதவி திட்டத்தின் கீழ் **இரண்டு பாலப் பணிகளுக்கு** இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) 06.12.2023 **அன்று** 14.00 **மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 17.11.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
செ.ம.தொ.இ/5972/ஒப்பந்தப்புள்ளி/2023 நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/ 2023-2024/ முவதொஅ / நாள்: 06.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் நபார்டு ஆர்.ஐ.டி.எப்.XXIX - 75 பாலங்கள் 2023-2024-ன் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான, ஒரு பாலப்பணிக்கு இணையவழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 06.12.2023, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 15.11.2023 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
செமதொஇ/5930/ஒப்பந்தப்புள்ளி/2023 நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சிராப்பள்ளி
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.50/2023-2024/தவஅ/நாள்-07.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(மு)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் **2023–24ம் ஆண்டிற்கான சி.ஆர்.ஐ.டி.பி திட்டத்தின்** கீழ், **மயிலாடுதுறை (நெ) க(மு)ப கோட்டம்** சார்ந்த **1 பணிக்கு** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **29.11.2023 அன்று 14.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **11.11.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
செ.ம.தொ.இ/5928/ஒப்பந்தப்புள்ளி/2023 **க(மு)ப வட்டம், திருச்சிராப்பள்ளி-20**

தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 34/ 2023 - 2024 / தவஅ / நாள்: 07.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(மு)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி மற்றும் திட்டம் சாரா பணிகள் 2023-24** தலைப்பின் கீழ் **சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் (நெ) க(மு)ப** கோட்டங்கள் சார்ந்த பணிக்கு **இணைய வழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளி **27.11.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **10.11.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
செ.ம.தொ.கீ /5917/ ஒப்பந்தப்புள்ளி / 2023 **க(மு)ப, மதுரை வட்டம்.**

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்
பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் – 695 034, CIN எண்–U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்–G பிளாக் (கிழக்கு), மும்பை–400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்:– உஸ்மான் கனி – 9843377165, கிரண் குமார். J ஜெயசுந்தரம் 9841292990.

பொது அறிவிப்பு – சொத்து ஏலம் மற்றும் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அடங்கிய தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்டின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிடப்பட்ட சொத்துகள் (இனிமேல் "கடனீட்டுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்க்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனீட்டு வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்க்காணும் தொகைக்குரிய கடனீட்டுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று "உள்ளது உள்ளவிட்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படை/நிபந்தனைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்கள் பெயர் & க.க.எ. | சுவாதீனம் வகை & நாள் | மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி | நிர்ணய விலை (₹) | முன்வைப்புத் தொகை (

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பணியாளர்களுக்கு 20% போனஸ்

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, நவ. 9: தமிழ் நாடு நுகர் பொ ருள் வாணிபக் கழக பணியாளர்களுக்கு 20% தீபாவளி போனஸ் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமை செயலாளர் கோபால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு 2022-2023 ஆண்டுக்கான போனஸ் 8.33 சதவீதம் மற்றும் கருணைத்தொகை 11.67 சதவீதம் ஆக 20 சதவீதம் 2023-224ல் வழங்க தமிழ் நாடு முதல் வர் உத்தரவிட்டுள்ளார். போனஸ் சட்டத்தின் கீழ் வரும் தமிழ்நாடுநுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 20% சதவீதம் (போனஸ் மற்றும் கருணைத்தொகை) வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதவிர தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ₹3000 கருணைத் தொகையாக வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் படி, தமிழ் நாடு முழுவதும் உள்ள அனைத்து மண்டலங்கள், நவீன அரிசி ஆலைகள், கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 49,023 பணியாளர்களுக்கு ₹29 கோடி போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக தொழிலாளர்களுக்கு 20 சதவீதம்

தனியார் தோட்ட தேயிலை தொழிலாளர்களுக்கு இணையாக தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக தொழிலாளர்களுக்கும் திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியாக நாளொன்றுக்கு ₹438 வழங்கிடவும், அதனை உடனடியாக நடைமுறைப்படுத்திடவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ₹7.78 கோடி ஆகும். அதோடு, தமிழ்நாடு தேயிலை தோட்ட கழக தொழிலாளர்களுக்கு 20%போனஸ் வழங்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். மேலும், திருத்திய ஊதிய விகிதங்களை நிலுவை தொகையுடன் உடனடியாக வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். இதற்காக ₹12.78 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

அதிமுக பெயர், கொடி, சின்னத்தை பயன்படுத்த

ஓபிஎஸ் அணிக்கு தனி நீதிபதி விதித்த தடையை எதிர்த்து மேல்முறையீடு

நாளை விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி

சென்னை, நவ. 9: அதிமுக வில் ஒற்றை தலைமையை கொண்டு வந்த தீர்மானத்துக்கும், ஓ.பன்னீர்செல்வம் உள்பட நான்கு பேரை நீக்கியதீர்மானத்துக்கும் தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்த நிலையில், அதிமுக கட்சி, சின்னம் ஆகியவற்றை பன்னீர்செல்வம் தரப்பினர் தொடர்ந்து பயன்படுத்ததடை விதிக்கக் கோரி கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுவில், அதிமுக பொதுச் செயலாளராக தன்னை தேர்தல் ஆணையமும், உயர் நீதிமன்றமும் அங்கீகரித்துள்ள நிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளர் என தொடர்ந்து கூறிவருகிறார். இது தொண்டர்களிடையே குழப்பத்தை விளைவித்து வருகிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி என்.சதீஷ்குமார், பொது செயலாளர் தேர்தல் செல்லும் என்கிற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவிற்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. எனவே, அதிமுக பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் ஆகிய வற்றை பயன்படுத்த கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வத்திற்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் சார்பில் வழக்கறிஞர் ராஜலட்சுமி நீதிபதிகள் மகாதேவன், முகமது சபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று முறையிட்டார். இதை ஏற்ற நீதிபதிகள் வெள்ளிக்கிழமை விசாரிப்பதாக தெரிவித்தனர். இந்த மேல் முறையீட்டு மனு நாளை விசாரணைக்கு வரவுள்ளது.

அதிமுக கரைபோட்ட வேட்டியை துறந்த ஓபிஎஸ்

அதிமுக பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இதுவரை எங்கு சென்றாலும் அதிமுக கரை வேட்டியுடன் வலம் வந்த ஓபிஎஸ், சிங்கப்பூருக்கு சிகிச்சைக்காக சென்றுள்ள அவர் விமான நிலையத்தில் அதிமுக கரைபோட்ட வேட்டியை தவிர்த்து சாதாரண வேட்டி அணிந்து வந்தார். அருகில் அவரது மகன் ஜெயபிரதீப்.

பாஜக நிர்வாகி அமர் பிரசாத் ரெட்டியை

குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யும் திட்டம் தற்போது இல்லை

ஐகோர்ட்டில் காவல்துறை தரப்பு தகவல்

சென்னை, நவ.9: பாஜ நிர் வாகி அமர் பிரசாத் ரெட் டியை தற்சமயம் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை என்று காவல்துறைதரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம் பனையூரில் தமிழ்நாடு மாநில பாஜக தலைவர் அண்ணாமலையின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த கொடி கம்பத்தை அகற்றிய காவல்துறையினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும், ஜேசிபி இயந்திரத்தின் கண்ணாடியை உடைத்ததாகவும் கூறி மாநில பாஜக திறன் மேம்பாட்டு பிரிவின் மாநில தலைவராக உள்ள அமர் பிரசாத் ரெட்டியை அக்டோபர் 21ம் தேதி கானத்தூர் போலீசார் கைது செய்தனர். சென்னையில் பதிவாகி இருந்த மேலும் இரண்டு வழக்குகளிலும் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தனது கணவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கு தடை விதிக்கக் கோரியும் அவரது மனைவி நிரோஷா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவில், ஜேசிபி இயந்திரம் உடைக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் நடந்த இடத்தில் தனது கணவர் இல்லை. தனது கணவர் மீது பொய் வழக்கு பதிவு செய்து அவரை குண்டர் சட்டத்தில் அடைக்க திட்டமிட்டுள்ளதாக கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மாநில தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா ஆஜராகி, மனுதாரர் தனது கணவர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு விடுவார் என்கிற அச்சத்தில் முன் கூட்டியே வழக்கு தொடர்ந்துள்ளார். தற்போதைய நிலையில் அமர் பிரசாத் ரெட்டியை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றார். இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, முன்னதாகவே தொடரப்பட்ட வழக்கு எனக் கூறி நிரோஷாவின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

டெட் தேர்வு தேர்ச்சி சான்றிதழை

30ம் தேதிக்குள் மீண்டும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை,நவ.9: 2022 டெட் தேர்வு தேர்ச்சி சான்றிதழை வருகிற 30ம் தேதிக்குள் பதிவிறக்கம் செய்து கொள்ள மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியம் 2 ஆயிரத்து 222 பட்டதாரி ஆசிரியர், வட்டார வளமைய பயிற்றுனர் பணியிடங்களை போட்டித் தேர்வு மூலம் நிரப்ப இருக்கிறது.

இந்த தேர்வில் பங்கேற்க ஆசிரியர் தகுதித் தேர்வு என்று அழைக்கப்படும் டெட் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக டெட் 2ம் தாளில் தேர்ச்சி பெற்றவர்களே இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அந்த வகையில் 2022 டெட் தேர்வில் தேர்ச்சி பெற்று, அதற்கான சான்றிதழை பதிவிறக்கம் செய்தவர்களில் பலர் அதனை தொலைத்துவிட்டதாகவும், அவர்கள் இந்த பணியிடத்துக்கு விண்ணப்பிக்க சான்றிதழை பதிவிறக்கம் செய்ய வேண்டியிருப்பதாகவும் ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்ததாக சொல்லப்படுகிறது.

அதனை ஏற்று, 2022 ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-1, தாள்-2 தேர்ச்சி சான்றிதழை வருகிற 30ம் தேதிக்குள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள மீண்டும் வாய்ப்பு வழங்கி ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடு

சென்னையில் இன்று ஆலோசனை கூட்டம்

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, நவ. 9: 2024ம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான ஆயத்த பணிகளில் இந்திய தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் பணிகள், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் பணிகளில் அந்தந்த மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழகத்திலும் 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. 18 வயது நிறைவடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வருகிற 18ம் தேதி (சனி), 19ம் தேதி (ஞாயிறு) நடைபெறுகிறது.

இந்த நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், கேரளா மற்றும் புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல் துறை உயர் அதிகாரிகளின் மண்டல மாநாடு சென்னையில் இந்திய ஆணையத்தால் மறுஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில், 2024ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான வாக்கெடுப்பு மற்றும் அதற்கான ஆயத்த பணிகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்த கூட்டத்தில், இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்பார்கள். இந்த மாநாடு இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை ஜிஎஸ்டி சாலையில் உள்ள ஹோட்டல் ராடிசன் புளூ வில் நடைபெறுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஆவின் பணியாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ்

சென்னை, நவ. 9: ஆவின் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு முதல்வர் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் பணியாளர்களுக்கு 2022-2023ம் ஆண்டிற்கான மிகை ஊதியம் 8.33 சதவிகிதம் மற்றும் கருணைத் தொகை 11.67 சதவிகிதம் ஆக மொத்தம் 20 சதவிகிதம் வழங்க ஆணையிட்டுள்ளார்.

அதன்படி சி மற்றும் டி தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் 4070 பணியாளர்களுக்கு இவ்வாண்டு தீபாவளி மிகை ஊதியம் மற்றும் கருணை தொகையை ரூ.5.96 கோடி வழங்க முடிவு செய்து பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் நந்தனம் ஆவின் இல்லம் வளாகத்தில் பணியாளர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை பால்வளத் துறை அமைச்சர் நேரடியாக வழங்கினார்.

இதற்கான மொத்த செலவீனம் ரூ.5.96 கோடியினை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்படுகிறது.

இந்நிகழ்வில் பால்வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் வினீத், பண்டிகங்காதர் முதன்மை விழுப்புக்குழு அலுவலர், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ. / நாமக்கல்	ST-01(A)	1
2	மே.பொ / சி / க.உ.(ம) ஒ	13, 14	2
3	CE / IT & RAPDRP	39, 40, 41	3
4	மே.பொ / கொ & நி/ தூ.அ.மி.நி	3327-S (கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது)	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/5921/ஒப்பந்தப்புள்ளி/2023

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION
HEAD OFFICE : 12, THAMBUSAMY ROAD, KILPAUK, CHENNAI - 600010
Ph. No. (044) 26426773 Email id : tncsc.tn@nic.in CIN : U15137TN1972SGC006157
BS6/042085/2023 **SHORT - E-TENDER NOTICE** Dated : 08.11.2023

Short E-Tender No : BS6/042085/2023-TNCSC/23-24

Tamil Nadu Civil Supplies Corporation invites Online electronic tender for **Purchase of "60,000 Metric Tonnes of Tur dal (Split-Husked & Fatka) (Indigenous) / Tur Dal (Split Husked -Imported) / Lentil locally known as Canadian Yellow Lentil (Split - Husked & Laired No.2) / Lentil locally known as Canadian Yellow Lentil (Whole - Husked & Laired No.2) as per AGMARK specifications."**

Complete short e-tender document can be viewed and downloaded from **https://tntenders.gov.in/nicgep/app**

The bidders have to participate online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III

Last Date and Time for Online Submission : **Upto 11.30 A.M. on 22.11.2023**

DIPR/ 5965 /TENDER/2023 **MANAGING DIRECTOR**

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.11/2023-2024/முவஅ/நாள்-07.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி அவர்களால் திருச்சி (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தை சார்ந்த நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XXIX/ 2023-24 (75 பாலங்கள்) கடனுதவி திட்டத்தின் கீழ் இரண்டு பாலப் பணிகளுக்கு இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) 06.12.2023 அன்று 14.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 17.11.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
செ.ம.தொ.இ/5972/ஒப்பந்தப்புள்ளி/2023 நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/ 2023-2024/ முவதொஅ / நாள்: 06.11.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் நபார்டு ஆர்.ஐ.டி.எப்.XXIX - 75 பாலங்கள் 2023-2024-ன் கீழ் கடலூர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான, ஒரு பாலப்பணிக்கு இணையவழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 06.12.2023, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 15.11.2023 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
செமதொஇ/5930/ஒப்பந்தப்புள்ளி/2023 நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1

சிறப்பு பஸ்கள் இன்று முதல்...

முதல் பக்க தொடர்ச்சி

நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையும் 24 மணி நேரமும் செயல்படும் என போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய 4 பேருந்து நிலையங்களுக்கு செல்ல ஏதுவாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படவுள்ளது. சிறப்பு பேருந்துகள் இயப்பட்டவுள்ளதால் கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து திருப்போரூர் - செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிவட்ட சாலை வழியாக செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பேருந்துகளின் இயக்கம் குறித்து பயணிகள் அறிந்து கொள்ள, இயக்கம் குறித்து புகார் தெரிக்க
9445014450
9445014436

ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் உள்ளிட்ட புகார்களுக்கு
1800 425 6151
044-24749002
044-26280445
044-26281611



அதிமுக ஊராட்சி தலைவர் கைத்துப்பாக்கியுடன் கைது

திருவிடைமருதூர், நவ.9: தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் காவல் சரகம் ஐந்து தலைப்பு வாய்க்கால் மெயின் சாலையில் போலீசார் நேற்றுமுன்தினம் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக 2 பைக்கில் வந்த 4பேரை மறித்து விசாரணை நடத்தியதில், களப்புலியூர் ஊராட்சி மன்ற தலைவர் அதிமுகவை சேர்ந்த முருகன் (45), ஈஸ்வரன் (21) என்றும், இவர்கள் வந்த பைக்கில் உரிமம் பெறாத கைத்துப்பாக்கி (பிஸ்டல்) இருந்ததும் தெரிய வந்தது.

போலீசார் ஊராட்சி மன்ற தலைவர் உட்பட 4 பேரையும் கைது செய்து, துப்பாக்கி, கத்தியை பறிமுதல் செய்தனர்.

கல்லூரிகளில் ராகிங் தடுப்பு குழு

சென்னை, நவ. 9: கல்லூரி கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவையில் தனியார் கல்லூரி ஒன்றில் மாணவர் ஒருவர் ராகிங் செய்யப்பட்ட விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக ராகிங்கில் ஈடுபட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்நிலையில் ராகிங் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கல்லூரிக் கல்வி இயக்குநர் கீதா, அனைத்து கல்லூரிகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: கல்லூரி மாணவர்களிடையே ராகிங் நடக்காதபடி ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் வழிகாட்டு நெறிமுறைகளில் கூறியுள்ளவற்றை கருத்தில்கொண்டு செயல்பட அறிவுறுத்தப்பட்டது. தற்போது நடப்பு கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும், சுயநிதி கல்லூரி முதல்வர்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முதல்வர்களுக்கு கல்லூரி கல்வி இயக்குநர் உத்தரவு

அதன் படி, ராகிங் நடைபெறுவதற்கு முன்பே எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்லூரிகளில் ராகிங் தடுப்பு குழு அமைத்தல் வேண்டும். ராகிங் பற்றி உடனடியாக புகார் செய்ய வேண்டிய ஆசிரியர்களின் பெயர், முகவரி, செல்போன் எண்கள் அறிவிப்பு பலகையில் வைக்கவேண்டும்.

ராகிங் புகார் பெட்டி, ஆலோசனை பெட்டியினை அமைத்து ராகிங் கொடுமையினை அறவே ஒழிக்க முன்னேற்பாடுகளை கல்லூரி முதல்வரும், துறைத் தலைவர்களும் கூடி ஆலோசித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கடந்த 2019ம் ஆண்டின் அரசு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, மராட்டிய அரசின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் இருக்கும் ராகிங் தடுப்பு குழுக்களில் அக்கல்லூரியின் தலைமை மற்றும் துறை சார்ந்த தலைவர்கள், பொதுத்துறை முக்கிய தலைவர்கள், போலீஸ் துறை, செய்தித்துறை, மாணவர்களின் பெற்றோர், மாணவர் இருப்பது போல, தமிழ் நாட்டிலும் கல்லூரிகளில் 'ராகிங்' குழுக்கள் அமைக்க வேண்டும். இதுதொடர்பாக ஆய்வு செய்து, அரசு, அரசு உதவி பெறும், சுயநிதி கல்லூரிகளிடம் இருந்து ராகிங் குறித்த அறிக்கை ஒருவாரத்துக்குள் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

தினகரன் ஈரோடு

ரூ.72 ஆயிரத்துக்கு நிலக்கடலை ஏலம்

மொடக்குறிச்சி, நவ.9: சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலக்கடலைக்காய் ஏலம் நடைபெற்றது.

ஏலத்தில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 29 மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக ரூ.80.40க்கும், அதிகபட்ச விலையாக ரூ.80.40க்கும், சராசரி விலையாக ரூ.80.40க்கும் ஏலம் போனது. மொத்தம் 903 கிலோ எடையுள்ள நிலக்கடலைகாய் ரூ.72 ஆயிரத்து 601க்கு விற்பனையானது.

வெளிமாநில மது விற்றவர் கைது

ஈரோடு, நவ. 9: ஈரோடு மாவட்டம் பிசில்வாடி-அருள்வாடி சாலையில் சட்ட விரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்வதாக போலீசாருக்கு தகவல் வந்தது. அதன்பேரில், தாளவாடி போலீசார் நேற்று முன்தினம் அங்கு விரைந்து சென்று வெளிமாநில மதுபானங்களை விற்பனை செய்து வந்த அருள்வாடி பகுதியை சேர்ந்த மாதேவ் (50) என்பவரை போலீசார் கைது செய்து, அவரிடம் இருந்த 30 வெளிமாநில மதுபான பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

தோட்டத்தில் தேங்கிய மழைநீர்

அம்மாபேட்டை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் ஒலகடத்தில் உள்ள வாழைத்தோட்டத்தில் மழைநீர் தேங்கி நிற்கிறது.

தனியார் பஸ்சில் பயணித்த

மாஜி டிஆர்ஓவை தாக்கிய கண்டக்டர் கைது

ஈரோடு, நவ. 9: ஈரோட்டில் தனியார் பஸ்சில் பயணித்த முதியவரை தாக்கிய கண்டக்டரை போலீசார் கைது செய்தனர்.

ஈரோடு சம்பத் நகர் பகுதியை சேர்ந்தவர் அண்ணாதுரை (70). மாவட்ட வருவாய் அலுவலராக (டிஆர்ஓ) பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர், நேற்று முன்தினம் இரவு ஈரோடு பஸ் ஸ்டாண்டில் இருந்து பெருந்துறை செல்வதற்காக தனியார் பஸ்சில் பயணித்தார். ஆனால், அந்த பஸ் நசியனூர் வழியாக திங்களூர் வரை செல்லும் பஸ் என்பதை அறியாமல் அண்ணாதுரை ஏறி விட்டார்.

இதைத்தொடர்ந்து, பஸ் ஈரோடு கலெக்டர் அலுவலகம் வந்தபோது தான் அண்ணாதுரைக்கு அவர் ஏறிய பஸ் பெருந்துறைக்கு செல்லாது என்பதை அறிந்து பஸ்சின் கண்டக்டரிடம் பஸ் மாறி ஏறி விட்டதாக கூறி இறங்க முயன்றார். அப்போது, பஸ் கண்டக்டரான கோபி அயலூர் செம்மாண்டாம்பாளையத்தை சேர்ந்த ரங்கன் மகன் சின்னன்னன் (31), அண்ணாதுரையை தரக்குறைவாக பேசியுள்ளார்.

மேலும், பஸ்சில் இதுவரை பயணித்ததற்கான டிக்கெட் கட்டணத்தை கொடுக்குமாறு கேட்டுள்ளார். அண்ணாதுரையும் அந்த கட்டணத்தை கண்டக்டர் சின்னன்னனிடம் கொடுத்துள்ளார். ஆனால், டிக்கெட் கட்டணம் போக மீதி சில்லரை வழங்கவில்லை. இதனால், அண்ணாதுரைக்கும், சின்னனனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில், ஆத்திரம் அடைந்த சின்னன்னன், முதியவர் என்றும் பாராமல் தாக்கியுள்ளார். இதுகுறித்து அண்ணாதுரை ஈரோடு எஸ்பி ஜவஹர் வீட்டிற்கே சென்று புகார் அளித்தார். அதன்பேரில், ஈரோடு வடக்கு போலீசார் விசாரணை நடத்தி, தனியார் பஸ் கண்டக்டர் சின்னன்னன் நேற்று கைது செய்து, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைத்தனர்.

பாப்பம்பாளையத்தில்

வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகளுக்கு பயிற்சி

ஈரோடு, நவ.9: ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டாரத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பாப்பம்பாளையத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழு அமைக்கப்பட்டு அக்குழுக்களுக்கு விவசாயிகள் பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சசிகலா தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் அருள்மொழி வர்மன் பங்கேற்று, கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைத்ததன் நோக்கம், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் குறித்தும், மானிய விபரங்கள் குறித்து விளக்கி பேசினார்.

வேளாண்மை அறிவியல் நிலைய பிரேமலதா, நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் தாக்குதல், அவற்றை கட்டுப்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கி பேசினார். உதவி வேளாண் அலுவலர் கலைச்செல்வி பங்கேற்று பிஎம் கிசான் திட்டம் குறித்தும், உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் விசுவநாதன், தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், உழவன் செயலி பதிவிறக்கம் செய்தல், அதனை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

விலையில்லா சேலை தயார்

பொங்கல் பண்டிகைக்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக ஈரோடு வீரப்பன்சத்திரம் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் விலையில்லா சேலை உற்பத்தி செய்யப்பட்டு தரம் பார்க்கப்படுகிறது.

கார் தீ பிடித்து எரிந்தது

ஈரோடு ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் திடீரென தீப்பிடித்து எரிந்தது.

ஈரோடு, நவ. 9: ஈரோடு சூரம்பட்டி பகுதியை சேர்ந்தவர் பாலாஜி (35). பாத்திர வியாபாரி. இவர், நேற்று அவரது உறவினர்களை திருச்சி மாவட்டத்திற்கு ரயில் மூலம் அனுப்பி வைக்க அவர்களை பாலாஜி காரில் ஈரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தார்.

பின்னர், காரில் இருந்து இறங்கி உறவினர்களை ரயில்வே ஸ்டேஷனுக்குள் அனுப்பி வைத்துவிட்டு, காரை திரும்ப எடுக்க வந்தார். அப்போது, காரின் முன்பகுதியில் இருந்து கரும் புகையுடன் தீ பிடித்து எரிய துவங்கியது. இதுகுறித்து தகவல் அறிந்து வந்த ஈரோடு தீயணைப்பு துறையினர் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இதில், காரின் முன்புற பகுதி தீயில் எரிந்து நாசமானது. இந்த தீ விபத்து கார் பேட்டரியில் ஏற்பட்ட கசிவின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர். இச்சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோட்டின் வளர்ச்சியின் முக்கிய அங்கம் கனி மார்க்கெட் ஜவுளி சந்தை

ஈரோடு, நவ. 9: ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவில் உள்ள அப்துல்கனி மார்க்கெட் ஜவுளி சந்தை தென்னிந்தியாவில் உள்ள மிகப்பெரிய ஜவுளி சந்தைகளில் ஒன்று. ஈரோட்டில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை கூடுகிறது.

இச்சந்தையானது, ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான 3.25 ஏக்கர் நிலத்தில் 1984-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இச்சந்தையில் சேலைகள், லுங்கிகள், துண்டுகள், போர்வைகள், சுடிதார்கள், ஆயத்த ஆடைகள், மேசை விரிப்புகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மிதியடிகள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜவுளி உற்பத்தி ரகங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இங்கு திருப்பூரில் உற்பத்தியாகும் 80 சதவீத பனியன், ஜட்டிகளும், ஈரோட்டில் உற்பத்தியாகும் லுங்கிகள், சட்டைகள், ஆயத்த ஆடைகள், துண்டுகள் ஆகியவற்றை 100 சதவீதமும், ஈரோடு ஜவுளிச் சந்தையில் ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், கரூர், மதுரை, தேனி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் உற்பத்தியாகும் ஜவுளி ரகங்கள் 70 சதவீதமும்,

போர்வைகளில் 70 சதவீதமும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், சூரத், புனே, மும்பை, அகமதாபாத் ஆகிய பகுதிகளில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சேலை ரகங்களும் இங்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வாரச் சந்தையில் வழக்கமாக ரூ.1 கோடி வரையிலும் வியாபாரம் நடைபெறும். இந்த ஆண்டு பெண்களுக்கான மஸ்தானி (மிடி போன்ற சுடிதார்), சராரா (பெரிய கவுன்) ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து ஈரோடு கனி மார்க்கெட் (ஜவுளி சந்தை வாரச் சந்தை வியாபாரிகள் சங்கத் தலைவர் கே.செல்வராஜ் கூறியதாவது:

ஈரோடு கனி மார்க்கெட்டில் 740 கடைகள் செயல்பட்டு வந்தது தற்போது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் புதிய வணிக வளாக கட்டிட கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

செல்வராஜ்

இப்பணிகள் காரணமாக கட்டிட பணிகள் போக மீதமுள்ள பகுதிகளில் 240 கடைகளும், சாலையோரமாக 500-க்கும் மேற்பட்ட கடைகளும் செயல்பட்டு வருகிறது. புதிய வணிக வளாக கட்டிட பணிகள் முடிவடைந்த பின்னர் ஏற்கனவே கனி மார்க்கெட்டில் கடை அமைத்திருந்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கிட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம்.

இச்சந்தை ஈரோட்டின் வளர்ச்சியில் முக்கிய அங்கமாக திகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிய ஜவுளி ரகங்களை கொல்கத்தா, சூரத் நகரங்களில் இருந்து கொள்முதல் செய்து அறிமுகப்படுத்தி வருகிறோம்.

ஈரோடு கனி மார்க்கெட் ஜவுளி சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட 191 ஜவுளிக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதன் வியாபாரிகள் அமைச்சர்கள் முத்துசாமி, கே.என். நேரு ஆகியோர் ஈரோடு வந்த போது கனி மார்க்கெட் ஜவுளி வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு கடைகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் இந்த கடைகளுக்கு டெபாசிட் வாங்க கூடாது என்றும் குறைந்த வாடகையை நிர்ணயம் செய்து கடைகளை வியாபாரிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம். இதை அமைச்சர்களும் பரிவுடன் கேட்டு ஏற்றுக் கொண்டனர்.

இதனால் மகிழ்ச்சி அடைந்த வியாபாரிகள் அமைச்சர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

மேலும், ஈரோடு கனி மார்க்கெட் ஜவுளி சந்தையில் வார சந்தை வியாபாரிகள் வியாபாரம் செய்து வந்தனர். ஜவுளி சந்தை வளாகம் கட்டும் போது அவர்கள் பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர். அவர்களுக்கு கனி மார்கெட் ஜவுளி சந்தை வளாகத்தில் மீண்டும் இடம் கொடுத்து வியாபாரம் செய்தால் கனி மார்க்கெட் ஜவுளி சந்தை மீண்டும் புத்துயிர் பெற்று சிறப்பாக நடக்க வழிவகை செய்யும் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

மசாஜ் சென்டரில் விபசாரம்: 3 வாலிபர் கைது

ஈரோட்டில் மசாஜ் சென்டரில் விபசாரம் நடத்தியதாக கைதான வாலிபர்கள்.

6 பெண்கள் மீட்பு

ஈரோடு, நவ. 9: ஈரோடு மசாஜ் சென்டரில் விபசாரம் நடத்திய 3 வாலிபர்களை போலீசார் கைது செய்து 6 பெண்களை மீட்டனர்.

ஈரோடு சம்பத் நகர் நால் ரோடு அருகே கீரின் ஸ்பா என்ற பெயரில் இயங்கும் மசாஜ் சென்டரில் பெண்களை வைத்து விபசாரம் நடத்தி வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில், ஈரோடு வடக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகம், எஸ்ஐ பழனிசாமி தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் இரவு சென்று அங்கு அதிரடியாக நுழைந்து சோதனை நடத்தினர். இதில், 6 பெண்களை வைத்து விபசாரம் நடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, மசாஜ் சென்டரில் பணியாற்றி வந்த சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த ரவிக்குமார் (30), திருச்சி மாவட்டத்தை சேர்ந்த விமல்ராஜ் (30), சால்வின்சகோ (30) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும், விபசாரத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட பெண்களை மீட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து ஸ்பாவின் உரிமையாளரான கரூர் மாவட்டத்தை சேர்ந்த சுமன் சிவா என்பவரை போலீசார் தேடி வருகின்றனர்.

பவானி அருகே

4.76 ஏக்கர் ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்க நடவடிக்கை

பவானி, நவ. 9: பவானி அருகே குறிச்சி மலைக்கரட்டில் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்ட 4.76 ஏக்கர் நிலத்தை மீட்கும் நடவடிக்கையில் வருவாய் துறையினர் நேற்று பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

குறிச்சி மலைக்கரடு பகுதியில் பட்டா நிலம், நிபந்தனை பட்டா நிலம் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளன. இப்பகுதியில், அரசு புறம்போக்கில், கரடு பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அதில் விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு புகார் அனுப்பினர்.

அதன்பேரில், பவானி வருவாய் துறையினர் கடந்த 24.7.2022 அன்று ஆய்வு நடத்தியதோடு, நில அளவைப் பணிகளில் ஈடுபட்டு, 4.76 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் கண்டறிந்தனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொள்ளுமாறு மோகன் என்பவருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

ஆனால், ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை. பயிர் சாகுபடி தொடர்ந்து நடைபெற்று வருவதாக புகார் எழுந்தது. இதனை தொடர்ந்து, பவானி தாசில்தார் தியாகராஜ், தேர்தல் துணை தாசில்தார் சரவணன், மண்டல துணை தாசில்தார் மோகனா, குறிச்சி வருவாய் ஆய்வாளர் விஜயலட்சுமி, வட்ட சார் ஆய்வாளர் முத்துராஜ், கிராம நிர்வாக அலுவலர் ராஜா மற்றும் வருவாய் துறையினர் நேற்று ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட சென்றனர்.

அப்போது, நில அளவீட்டு பணியின் போது நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டு இருந்தும், தற்போது வெங்காயம் மற்றும் வாழை, தென்னை மரங்கள் நடப்பட்டு இருந்ததும் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதைத்தொடர்ந்து, அம்மாபேட்டை, பர்கூர், அந்தியூர் போலீசார் 25க்கும் மேற்பட்டோர் பாதுகாப்புடன் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் போடப்பட்டிருந்த சொட்டுநீர் பாசனத்துக்கு போடப்பட்டிருந்த குழாய்களை வருவாய் துறையினர் அகற்றிய போது கடும் எதிர்ப்பு எழுந்தது.

சம்பவ இடத்துக்கு வந்த வழக்கறிஞர் ஆண்டவன், சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை அறுவடை காலம் முடியும் வரை கால அவகாசம் வழங்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். ஏற்கனவே, கால அவகாசம் கொடுக்கப்பட்ட நிலையில் புதிதாக பயிர் சாகுபடியில் ஆக்கிரமிப்பாளரான மோகன், ஈடுபட்டு வருவதால் மேலும் அவகாசம் அளிக்க முடியாது என தெரிவித்தனர்.

சாகுபடி பயிர்கள் அழிக்கப்பட்டால் பெரும் இழப்பு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால், இந்த ஒரு முறை மட்டும் அவகாசம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதுகுறித்து ஆலோசனை நடத்திய வருவாய்த்துறையினர் 18.12.2023க்குள் அனைத்து வகையிலான ஆக்கிரமிப்புகளையும் கரடு புறம்போக்கு நிலத்திலிருந்து அகற்றிக் கொள்ள வேண்டும் என உத்தரவிட்டனர்.

கரடு புறம்போக்கு ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கையில் அதிகாரிகள், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஈடுபட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கரடு புறம்போக்கு நிலத்தில் பவானி தாசில்தார் தியாகராஜ் தேர்தல் துணை தாசில்தார் சரவணன் உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்

muthoot HOUSING FINANCE

பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் - 695 034, CIN எண்-U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்:- உஸ்மான் கனி - 9843377165, கிரண் குமார். J ஜெயசுந்தரம் 9841292990.

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அடங்கிய தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்டின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிட்டச் சொத்துகள் (இனிமேல் "கடனீடுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனீடாக வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்க்காணும் தொலைக்குரிய கடனீடுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று "உள்ளது உள்ளவிட்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படைநிபந்தனைகளில் கடனீடுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர்கள் பெயர் & க.க.எ.	சுவாதீனம் வகை & நாள்	மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி	ரிர்ணய விலை (₹)	முன்வைப்புத் தொகை (₹)
1	க.க.எ. எண்: 11117099648 1. அருள்செல்வன் நட்ராஜ், 2. தனலட்சுமி நட்ராஜ்	அக்கப்பூர்வ சுவாதீனம்- 11-ஜூன்-2022	06-நவம்பர்-2023 தேதியன்று ₹.6,66,090.64/-	₹ 10,00,000/-	₹ 1,00,000/-

பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) /அசையா சொத்துக்கள் (கள்) பற்றிய விளக்கம் - S.எண்.276/1, D.எண்.47, புதி.எண்.50, கிழக்குத் தெரு, கூரியம்பாளையம் கிராமம், காளியம்மன் கோயில் தெரு, பவானி மெயின் ரோடு, ஈரோடு- 638005, தமிழ்நாடு, இந்தியா.

பார்வையிடும் நாள் & நேரம்: 04-டிசம்பர் -2023 & 05-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
ஏலத் தேதி: 14-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை & ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 13-டிசம்பர்-2023
விற்பனை இடம்- T.S.P வளாகம் 2வது தளம், எல்லிஸ் நகர் 70 அடி சாலை சந்திப்பு, ராஜா சர் முத்தையா நகர், பை பாஸ் சாலை, மதுரை, தமிழ்நாடு -625016.
விற்பனை இடம்- 138, 2வது தளம், அமீன் மேனர், நுங்கம்பாக்கம், உயர் சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 034

திட்டமிடும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சொத்துகளை பார்வையிடலாம். பொது ஏலம் விதிமுறைகள் & நிபந்தனைகள்:- 1) விற்பனையானது கண்டிப்பாக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீடுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் வழிகாட்டுதல் நடைமுறையின்படி இதன்கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. 2) சொத்து "உள்ளது உள்ளவிட்தில்" மற்றும் "உள்ளது உள்ளவாறு" "உள்ளது எதுவோ அது" மேலும் "உதவிசாரா" நிபந்தனையில், வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவை உட்பட விற்பனை செய்யப்படும். 3) ஏலத்திலான சொத்துகளை மேலே குறிப்பிட்ட நாள் & நேரத்தில் பார்வையிடலாம். சொத்துகளை பார்வையிடுதல் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து விசாரணைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் சம்பந்தப்பட்ட இடங்களிலான அதிகாரப்பூர்வ அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். அரவமுள்ள வாங்குவோர் நிர்ணய விலையின் 10% முன்வைப்புத்தொகைக்காக (EMD), "முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்" பெயரில் மும்பையில் மாற்றத்தக்க கேப்பு வரைவோலையுடன் ஒரு முத்திரையிட்ட உறையில் மேற்கூறிய சொத்துக்கான அவர்தம் ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பலாம். 4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை மற்றும் ஏலதாரரின் அடையாளச் சான்று மேலும் இருப்பிடச் சான்றின் நகலபிரதி அதாவது கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், ஏனையவை போன்றவற்றின் நகல் ஒன்றையும் இணைக்க வேண்டும். 5) சொத்து ரிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்பட சாத்தியமில்லை. 6) ஏலத்தில் ஆஜராகும் ஏலதாரர்கள் ரிர்ணயித்த ரிர்ணய விலைக்கு கூடுதலாக ₹10000/- மடங்கில் அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை உயர்த்த அனுமதிக்கப்படுவர். 7) அனைத்து நிலுவைகள் மற்றும் செலவுகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்சாரம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது ஏதேனும் பிற நிலுவைகள் முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள் உள்ளிட்டவை மேலும் அனைத்து பிற செலவுகள் மற்றும் மேற்கூறிய சொத்துகள் தொடர்பான விற்பனை சான்றிதழ் பதிவுக்கான கட்டணங்கள் அனைத்தும் வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 8) வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர் விற்பனை தொடர்பாக அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதிலிருந்து அடுத்த வேலை நாளுக்குள் இறுதி ஏலத் தொகையின் 25% (ஏற்கனவே செலுத்திய 10% முன்வைப்புத்தொகை சரிகட்டலுக்கு பிந்தையது) தொகையை செலுத்த வேண்டும், தவறினால், முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். 9) விற்பனை விலையின் மீதி 75% ஆனது அதிகாரப்பூர்வ அதிகாரியால் வெற்றிகர கொள்முதலாளருக்கு விற்பனை ஒப்புதல் தெரிவிக்கப்பட்டதன் 15 நாட்களுக்குள் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியால் மேலும் தனி விற்பன உரிமையில் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட இவ்வித நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். 10) அதிகாரப்பூர்வ அதிகாரி அவருடைய விருப்ப உரிமையில், முன்னறிவிப்புமின்றி, விற்பனைக்கான இந்த அறிவிப்பின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உரிமை கொண்டிருக்கிறார். 11) ஒருவேளை, கடனீடுக் கடனீந்தோருக்கு ஏற்பட்ட அனைத்து செலவு, கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து அனைத்து நிலுவைகளும் மேற்கூறிய பெயரிலான கடனதார / உப-கடனதார முலம் ஏலத் தேதிக்கு ஒரு வேலை நாள் முன்பு வரைக்குள்ளாக செலுத்தப்பட்டு விட்டால் பிறகு சொத்து விற்பனை செய்யப்படாது மேலும் எதிர்நோக்கும் ஏலதாரர்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் M/s. முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்கு எதிராக ஏதேனும் பொறுப்பு / கோருரிமையின்றி அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதார இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குள் நாளது தேதி வரையான வட்டி மற்றும் செலவினங்களுடன் மேற்குறிப்பிட்டவாறு கடன்பொறுப்பை முழுமையாக தீர்க்குமாறு மேலும் நிலுவைகளை செலுத்துமாறு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீடுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் கடனீடுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) & 9 கீழ் சட்டப்பூர்வ 30 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது தவறினால் கடனீடுச் சொத்து மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை செய்யப்படும். கடன்தார்/கள் 30 நாட்கள் காலத்திற்குள் சொத்து இத்தகிலிருந்து அவர்தம் உரிமையளிக்கப்படாதப் பொருட்களை அகற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் இல்லையெனில் அது அவர்தம் பொறுப்பு மற்றும் செலவில் சொத்து இத்தகிலிருந்து அகற்றப்படும்.

இடம்: ஈரோடு, தேதி :09-நவம்பர்-2023 ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன்

890415677

9.30 AM - 6.00 PM